முச்சந்தி முரளி



"ஆளுக்கு மீசைக்கும்
ஆசை கூழுக்கும்
ஆசை போல.
நல்ல கூத்துமாத்துதான்
கண்டியளோ"

Registered as a Newspaper

பக்கங்கள் - 12
விலை - ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 170

செவ்வாய்க்கிழமை
14 மே 2024

வைகாசி 01 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

# முள்ளிவாய்க்கால் கர்மவினை கோத்தாபயவைத் துரத்தியது!

## நாடாளுமன்றில் நேற்று சிறீதரன் கருத்து



**கொழும்பு, மே 14**

**முள்ளிவாய்க்கால் படுகொலையை அரங்கேற்றிய ராஜபக்ச குடும்பம் எந்தக்காலத்திலும் நிம்மதியாக இருக்கப்போவதில்லை, கர்மவினை அவர்களுக்கு பாடம் கற்பிக்கும் - இவ்வாறு தமிழரசுக் கட்சியின் யாழ்., கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.**

11

## நாடாளுமன்றில் 'முள்ளிவாய்க்கால் கஞ்சி'

கொழும்பு, மே 14

முள்ளிவாய்க்காலில் மக்கள் கஞ்சி பருகிய சிரட்டையை நாடாளுமன்றத்தின் நூதனசாலையில் வைக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

11

## ரணிலை ஆதரிப்பதென முடிவெடுக்கவேண்டும்

### பெரமுனவினருக்கு எஸ்.பி. அறிவுரை



கொழும்பு, மே 14

"ஜனாதிபதித் தேர்தலின்போது ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் பொதுஜன பெரமுன பரிசீலிக்க வேண்டும்" - என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

11

## எந்தக் கொம்பன் வரினும் சஜித்தே வெற்றிபெறுவார்

கொழும்பு, மே 14

ஜனாதிபதி ரணில், தம்மிக்க பெரேரா என எவரை பெரமுனவினர் களமிறக்கினாலும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவே வெற்றிபெறுவார் என்று பிரதான

11

## பெரமுனவை தோற்கடிக்க சந்திரிகாவின் தலைமை

### அழைக்கின்றார் டிலான்

கொழும்பு, மே 14

ரணில் - ராஜபக்ச அரசை விரட்டியடிப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தியினருடன் அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் பொறுப்பை முன்னெடுக்குமாறு

11

### தேர்தல் பரப்புரைக்காக

## அமெ. நிறுவனத்தை வைத்து ஜனாதிபதி ரணில் 'ஸ்கெட்ச்'

கொழும்பு, மே 14

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குரிய தேர்தல் பரப்புரைகளை முன்னெடுத்த அமெரிக்க நிறுவனமொன்றே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குரிய பரப்புரை பணிகளுக்குரிய வியூகங்களை முன்னெடுக்கும் எனத் தெரியவருகின்றது.

11

## பூநகரி மின்னுற்பத்தி இழுபறி நிலையில்!

கிளிநொச்சி, மே 14

பூநகரி மிதக்கும் சூரியகல மின் உற்பத்தித் திட்டம் இழுபறியில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தகாரர் ஒப்பந்தத்தொகையைச் செலுத்தாமையே இந்த இழுபறிக்குக் காரணம் என்றும், ஒப்பந்தத் தொகையைச் செலுத்த வேண்டிய இறுதித் திகதி ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

11

### மன்னார் பள்ளிமுனைக் கடலில்

## படகு மூழ்கியதில் மீனவர் உயிரிழப்பு

மன்னார், மே 14

மன்னார் பள்ளிமுனைக் கடற்பரப்பிலிருந்து வள்ளத்தில் கடற்றொழிலுக்குச்

11

## கிணற்றிலிருந்து சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், மே 14

வடமராட்சி கிழக்கு கேவில் கடற்கரைப் பகுதியில் உள்ள கிணறொன்றுக்குள்

11

## முறிகண்டியிலும் சடலம் மீட்பு!

முல்லைத்தீவு, மே 14

முல்லைத்தீவு - மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறிகண்டிப்பகுதி

11

### ஜனாதிபதித் தேர்தலில்

## எதிரணியின் வேட்பாளராக போட்டியிடுவதற்குத் தயார்

### தமிழ்ப் பொதுவேட்பாளரில் உடன்பாடில்லை எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. நேற்றுத் தெரிவிப்பு!

யாழ்ப்பாணம், மே 14

தமிழ்ப் பொதுவேட்பாளராக நான் தேர்தலிலே போட்டியிடமாட்டேன். ஜனாதிபதியாக வருவதற்கு ஜனாதிபதி வேட்பாளராக, எதிரணி சார்பிலான பொதுவேட்பாளராக, என்னைக் களமிறங்கச் சொன்னால் அது தொடர்பில் பரிசீலிக்கமுடியும் என ஜனாதிபதி சட்டத்தரணியும் நாடாளு

11

## தடுப்புக் கைதி தப்பித்து ஓட்டம்

கொழும்பு, மே 14

கஞ்சாப் போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதியொருவர் தப்பியோடியுள்ளார்.

குறித்த இளைஞனைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து

12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறப்பு விசாரணை அதிகாரியாக மன்னாரில் பெண் நியமனம்



மன்னார், மே 14
மன்னார் மாவட்டத்தில் வெற்றிடமாக இருந்த திரு இறப்பு விசாரணை அதிகாரி பதவிக்கு திருமதி ஜீஷ்ற் ஷியாமினி தயாளராஜன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.
கொழும்பிலுள்ள நீதி அமைச்சின் காரியாலயத்தில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸவினால் நேற்றுத் திங்கட்கிழமை இந்த நியமனம் வழங்கப்பட்டது.
மன்னார் வரலாற்றில் முதலாவது பெண்திரு இறப்பு விசாரணை அதிகாரியாக இவர் நியமனம் பெற்றுள்ளார்.
மேலும் இவர் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி சமூக விஞ்ஞானப் பிரிவில் கல்வி பயின்று இளமாணிப் பட்டம் பெற்றுள்ளதுடன், அறிவிப்பாளராகவும், சமூகச் செயற்பாட்டாளராகவும், வளவாளராகவும் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-213)

# பாலூட்டும் போத்தலில் கைக்குண்டுகள் மீட்பு!

கொழும்பு, மே 14
வீடொன்றில் குழந்தைகளுக்குப் பாலூட்டும் பால் போத்தலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு கைக்குண்டுகள் மற்றும் ரவைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் வெலிப்பன்ன, நாவுட்டுடுவப் பகுதியில் நடந்துள்ளது.
மேல் மாகாண புலனாய்வு அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட இரண்டு கைக்குண்டுகள், ரவைகள் என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

# முள்ளிவாய்க்கால் கடற்கரையில் பிதிர்க்கடன் செலுத்த ஏற்பாடு!

முல்லைத்தீவு, மே 14
**தமிழினப் படுகொலையின் 15ஆம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு, எதிர்வரும் 18ஆம் திகதி பிதிர்க்கடன் செலுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த தங்களுடைய உறவுகளுக்கான பிதிர்க்கடன் செய்ய விரும்புகின்றவர்கள் எதிர்வரும் 18ஆம் திகதி காலை 7 மணி முதல் 9.30 மணி வரை கப்பல் வீதியிலே உள்ள கடற்கரைப் பகுதியில் விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ள இடத்திலே பிதிர்க் கடன்களை செய்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.
மக்கள் எந்த ஒரு பொருள்களையும் கொண்டு வரத் தேவையில்லை எனவும் தாங்கள் தங்களுடைய உயிரிழந்த உறவுகளின் பெயருடன் வருகை தந்து அவருடைய பெயரைக் கூறி விசேடமாக தமிழ்மொழி மூலமாக பிதிர்க்கடன்களைச் செய்யமுடியும்.
பிதிர்க்கடன்களைச் செய்வதோடு அன்றைய தினம் மு.ப.10.30 மணிக்கு முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் இடம்பெறவுள்ள நினைவேந்தல் நிகழ்விலும் கலந்து கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

# தந்தை துப்பாக்கிச்சூடு; மகன் மருத்துவமனையில்



கொழும்பு, மே 14
தந்தையின் துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த மகன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
சூரியவெவ வெவேகம பிரதேசத்தில் இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை நடந்துள்ளது.
தந்தைக்கும் மகனுக்கும் ஏற்பட்ட வாக்குவாதம் துப்பாக்கிச்சூட்டில் முடிந்துள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளதாக சூரியவெவ பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# குருதி வெள்ளத்தில் முதியவரின் சடலம்

பருத்தித்துறை, மே 14
தனிமையில் வசித்து வந்த முதியவர் ஒருவர் குருதி வெள்ளத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
கணையந்தோட்டம், புலோலி வடக்கைச் சேர்ந்த நமசிவாயம் இராதாகிருஷ்ணன் (வயது -64) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
தனிமையில் வசித்து வந்த அவர் வீட்டில் உயிரிழந்த நிலையில் சடலமாகக் காணப்பட்டுள்ளார். இது தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய சம்பவ இடத்துக்கு நேற்றுமுன்தினம் இரவு சென்ற பருத்தித்துறை திரு இறப்புவிசாரணை அதிகாரிசதானந்தம்சிவராஜாவிசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.
சடலம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-100)

# யானைகள் அட்டகாசத்தை தடுக்கக் கோரிக்கை

முல்லைத்தீவு, மே 14
விசுவமடு, மேட்டுப்பட்டிக் கிராமத்தில் விவசாயி ஒருவரின் பயிர்களுக்குள், யானைகள் புகுந்து சேதம் விளைவித்துள்ளதாக அவர் கவலை தெரிவித்துள்ளார். கடந்த புதன்கிழமை நள்ளிரவுவேளை இது இடம்பெற்றுள்ளது. சுமார் 3 யானைகள் தமது தோட்டத்துக்குள் உட்புகுந்து, அறுவடை செய்யும்தருவாயிலிருந்த வத்தகைப் பழங்கள் மற்றும் 100 க்கும் மேற்பட்ட வாழை மரங்கள் என்பனவற்றைச் சேதமாக்கியுள்ளன என அவர் தெரிவித்தார். மேலும், நீண்டகாலமாக ஏற்பட்டு வருகின்ற இந்தப் பிரச்சினைக்கான தீர்வை, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து பெற்றுத் தரவேண்டும் என அந்தப் பகுதி மக்கள் கேட்டுள்ளனர். (ப-113)

# தொலைபேசி தொந்தரவு; இனி தண்டம் ஒரு லட்சம்


கொழும்பு, மே 14
தொலைபேசி ஊடாக பொய்யான தகவல்களைப் பகிர்ந்து பொதுமக்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்துவோருக்கு அபராதம் விதிக்கப்படவுள்ளது.
இதுபோன்ற குற்றங்களை மேற்கொள்பவரின் குற்றம் நிரூபிக்கப்பட்டால், ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்படும். அத்துடன் குற்றங்களை மேற்கொள்பவரின் தொலைபேசி இணைப்பும் துண்டிக்கப்படும். தொடர்ந்து குற்றம் நடந்தால், குற்றம் செய்தவருக்கு ஒவ்வொரு நாளும் ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்படும். தவறான தகவல்களை அனுப்பும் தொலைத்தொடர்புக் கருவிகள் நீதிவானின் உத்தரவு மூலம் அரசுடைமையாக்கப்படும். இத்தகைய ஏற்பாடுகளுடன் தொலைத்தொடர்பு திருத்தச் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# வவு.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் சம்பள உயர்வு கோரி போராட்டம்

வவுனியா, மே 14
பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர், சம்பள உயர்வு கோரி நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.
வவுனியா பல்கலைக்கழக பூங்காவீதி அலுவலகத்தில், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த பின்னர் அலுவலக வாயிலிலிருந்து ஆரம்பமான ஊர்வலம் புகையிரத வீதியூடாக பழைய பேருந்து நிலையம் வரை சென்று அங்கு கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டது. இதன்போது வவுனியா பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் மற்றும் மாணவர் சங்க ... (ப-110)




## திருத்தி வாசிக்கவும்



கடந்த 12.05.2024 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் 12 ஆம் பக்கம் வெளிவந்த **சுப்பிரமணியம் அருமைநாயகம் கலாபூசணம் முல்லை பேரொளி** என்பதற்கு பதிலாக **முல்லை போராளி** என தவறுதலாக வெளிவந்தமைக்கு வருந்துகின்றோம்.
**விளம்பரதாரர்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# தொல்லியல் பட்டதாரிகள் திட்டமிட்டு புறக்கணிப்பா?

கிளிநொச்சி,மே 14

மத்திய அரசின் கீழ் இயங்கும் தொல்லியல் திணைக்களம், அருங்காட்சியகம் ஆகியவற்றுக்கான ஆட்சேர்ப்பில் வடக்கு மாகாண தொல்லியல் துறை பட்டதாரிகள் புறக்கணிக்கப்பட்டு வரும் நிலையில் தற்போது ஆசிரிய சேவை உள்ளீர்ப்பிலும் நாம் உள்வாங்கப்படவில்லை என்று வடக்கு மாகாண தொல்லியல் துறை பட்டதாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்குவதற்கான விண்ணப்பங்கள் அண்மையில் கோரப்பட்டிருந்தன. இந்த விண்ணப்பகோரலின் போது வடக்கில் தொல்லியல் பட்டதாரிகள் தவிர்க்கப்பட்டே விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. ஆனால் நாட்டின் ஏனைய மாகாணங்களில் தொல்லியல்துறை பட்டதாரிகள் வரலாற்றுப் பாட ஆசிரிய சேவைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர். அனைத்துத்துறைகளிலும் ஆட்சேர்ப்புச்செய்வதில் எம்மைப் புறக்கணிப்ப தால் எமது எதிர்காலம் கேள்விக்குள்ளாகியுள்ளது - என்றனர்.

இதுகுறித்து மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது. வடக்கு மாகாணத்தில் தொல்லியல் துறையில் வெற்றிடங்கள் இன்மையால் ஆட்சேர்ப்புச் செய்யவில்லை. வரலாற்றுப் பாட ஆசிரியர் பதவிக்கு தொல்லியல்துறை பட்டதாரிகள் உள்வாங்கப்படுவதாக இருப்பின் அவர்கள் தங்களின் பாடத்தில் மூன்றில் ஒன்று என்ற அடிப்படையில் சம்பந்தப்பட்ட பாடங்களைக் கற்றிருக்கவேண்டும் எனத் தெரிவித்தார். (ச-214)

## கால்நடைகளால் அழிவுறும் சிறுபோகம்

முத்துஐயன்கட்டுக் குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், இரவு வேளைகளில் அவிழ்த்து விடப்படும் கால்நடைகளால் பயிரழிவு ஏற்படுகின்றது என்று விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர். ஒவ்வொரு விவசாயியும் பெருமளவு செலவு செய்து சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில் கால்நடைகளையும் பட்டிகளில் அடைக்காது அவிழ்த்து விடுகின்றமையால் நெற்செய்கை மேலும் பாதிப்புற்று நட்டத்தை எதிர்நோக்க நேரிடுகிறது. உரிய அதிகாரிகள் கால்நடைகளை கட்டுப்படுத்த தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-500)

## மின்விளக்குக்கு ஒளியூட்டுங்கள்

புதுக்குடியிருப்பு , மே 14

கைவேலி, திம்பிலிச் சந்தியில் அமைக்கப்பட்டிருக்கும் தொலைத்தொடர்புக் கோபுரத்தில் பொருத்தப்பட்ட மின்விளக்கு இரண்டு வாரத்துக்கும் மேலாக ஒளிராதுள்ளதால் அந்தப் பகுதி இருளில் மூழ்கியுள்ளது என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ச)



## வவு. சிறைச்சாலை முன் உணவகம், சலூன் திறப்பு

வவுனியா,மே 14


சிறைச்சாலைகள் திணைக்களத்தால் வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலைக்கு முன்பாக உணவகம் மற்றும் முடிதிருத்தும் நிலையம் என்பன நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை திறந்துவைக்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் துசார உப்புல்தெனிய பங்கேற்று அவற்றைத் திறந்து வைத்தார். உணவகத்தில் குறைந்த விலையில் பொதுமக்கள் உணவுகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-110)

# பாலைக்குற்றிகள் கடத்தல்; பொலிஸார் மடக்கிப்பிடிப்பு

யாழ்ப்பாணம்,மே 14

அனுமதியின்றி சட்டவிரோதமாக டிப்பர் வாகனத்தில் கடத்தப்பட்ட சுமார் முப்பது இலட்சம் ரூபா பெறுமதியான பாலை மரக்குற்றிகள் சாவகச்சேரி - கனகம்புளியடிப் பகுதியில் வைத்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பொலிஸ் உத்தியோகத்தர்களின் விசேட சோதனை நடவடிக்கையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அவை சிக்கின.



கடத்தல்காரர்கள் டிப்பர் வாகனத்தையும் மரங்களையும் கைவிட்டு விட்டுத் தப்பித்துச் சென்ற நிலையில் சந்தேகநபர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கையை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-20)

## தினம் தெரியுமோ?

சாட்சிக்காரன் காலில விழுகிறதை விடவும் சண்டைக்காரன்ர காலில விழுந்தாத் தான் வழக்கை முடிக்கலாம் எண்டு சொல்லுவினம். இப்ப அப்பிடியெல்லாம் இல்லை. சண்டைக்காரன்ர காலில விழுகிறதை விட சாட்சிக்காரனை வெருட்டினாலே வழக்கை தள்ளுபடி செய்யலாமெண்டு சிலர் நினைக்கினம். நாலைஞ்சு நாளைக்கு முதல் புன்னாலைக்கட்டுவனில பொலிஸ்காரர் துரத்திக் கொண்டுபோய், காலால உதைஞ்சதில ஒருத்தர் கரண்ட் போஸ்ட்டோட மோதுப்பட்டு செத்தவரெல்லோ. அப்பிடி அந்தாளை பொலிஸ் உதையேக்க நேரில கண்ட சனம் பொலிஸை அடிக்கிற அளவுக்குப் போட்டுது. பிறகு ஒருமாதிரி அவை தப்பி வந்திட் டினம்.

இப்ப என்னெண்டால், சனம் தங்களுக்கு எதிராச் சாட்சி சொன்னால் நிலைமை சிக்கலாயிடும், பொலிஸில சனத்துக்கு இருக்கிற பயம் போடும் எண்டு நினைச்சு, ஒருவேலையில இறங்கியிருக்கினமாம். பொலிஸ் அந்த ஆளை உதைச்சதை நேரில கண்டவை எல்லாருக்கும் போனில 'நீங்கள் சாட்சி சொல்லப் போகக் கூடாது. போனால் பிறகு பொலிஸ் ஆரெண்டு காட்டுவம்.அண்டையான் சம்பவத்தை வீடியோ எடுத்து ரிக்ரொக்கில போட்டஆக்களுக்கும் வழக்குப்போடப்போறம்' எண்டமாதிரி கடும் மிரட்டலாம். ஒருவேளை பொலிஸ்காரர் இப்பிடிச் சொன்னபிறகும் அவைக்கு எதிராச் சாட்சி சொன்னால், தங்களுக்கும் குடும்பத்துக்கும் ஏதும் சிக்கல் வந்திடுமோ எண்டு நினைச்சு, சாட்சி சொல்ல வாறமெண் டவை இப்ப பின்னடிக்கினமாம்.

ஆனால் பொலிஸ் ஸ்ரேசனில நேரடியா இதுபற்றிக் கேக்க 'அப்பிடி நாங்கள் ஒருத்தருக்கும் கோல் எடுக்கேலை. இதெல்லாம் கட்டுக்கதை' எண்டு சொல்லுகினமாம். அப்ப பொலிஸ்காரர் இப்பிடி வெருட்டேலை எண்டால், ஆர் அந்த வெருட்டல் கோல் எடுத்தவை எண்டதைப் பொலிஸ்காரர் கண்டுபிடிக்கவேணும். அப்பிடிக் கண்டுபிடிச்சால் பொலிஸ்காரர் மேல உள்ள கெட்டபேர் கொஞ்சம் இல்லாமல் போகும், அதோட சாட்சிக்காரரும் துணிஞ்சு நீதிமன்றத்துக்கு வருவினம். பொலீஸ் ஸ்ரேசனில சொல்றமாதிரி, வேற ஆரோதான் இப்பிடி பொலிஸின்ர பேரைச் சொல்லி வெருட்டுகினம் எண்டால், இப்பிடி வேற விசயங்களுக்கும் அவை பொலிஸின்ர பேரைப் பாவிச்சு செய்யக்கூடாத வேலையெல்லாம் செய்யேக்கையும் பொலிஸ்காரர் கைகட்டி, வாய்பொத்தி நிக்கப்போயினமோ?

நெற்றிக்கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றம்தான். பொலிஸ்காரர் பிழை செய்தாக்கூட அதை பிழை எண்டு சொல்லி, தண்டனை வாங்கிக் குடுத்தாத்தான் சனம் பொலிஸ்காரரை நம்பும். குற்றங்கள் குறையும். அதைவிட்டிட்டு தங்கட ஆக்கள் செய்த பிழையளை இப்பிடி சாட்சியளை வெருட்டி, மறைக்க வெளிக்கிட்டால், காக்கிச்சட்டைக்காரரைவிடவும் கள்ளர் பரவாயில்லை எண்டுதானே சனங்கள் நினைக்கும்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குருப்பெயர்ச்சி பலன்கள் (2024 - 2025)



## விருச்சிகம்

கலகலப்பான பேச்சாலும் சுறுசுறுப்பான செய்கையாலும் அனைவரின் மனத்திலும் இடம்பிடிப்பவர்கள் விருச்சிக ராசிக்காரர்கள். நட்சத்திர மண்டலத்தில் விசாகம் 4ஆம் பாதம் முதல், அனுஷம், கேட்டை ஆகிய நட்சத்திரங்கள் விருச்சிக ராசியில் வரும். செவ்வாயை அதிபதியாகக் கொண்ட விருச்சிக ராசிக்காரர்களுக்கு இந்தக் குருப்பெயர்ச்சி எப்படிப்பட்ட பலன்களை வழங்கும் என்பதைக் காணலாம்.

கடந்த ஆண்டு குருபகவானின் செவ்வாயின் மேஷ ராசியில் சஞ்சரித்தாலும் 6ஆம் இடத்தில் மறைந்திருந்தார். எனவே வரவேண்டிய நன்மைகள் தடைப்பட்டன. சுபநிகழ்ச்சிகள் தள்ளிப்போயிருக்கும். இனி எல்லாம் கூடிவரும். திருமண வயதில் உள்ள இளைஞர்களுக்குத் திருமண வாய்ப்புகள் தேடிவரும். கணவன் - மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணை மூலம் பணவரவுக்கு வாய்ப்புண்டு. வங்கிக்கடனுதவியுடன் சொந்த வீடு வாங்குவீர்கள். வெளிமாநில புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். இழந்த பதவியை மீண்டும் பெறுவீர்கள். சொத்துப் பிரச்சினை தீரும்.

குருபகவான் உங்கள் லாப வீட்டைப் பார்ப்பதால் தொட்ட காரியம் துலங்கும். மூத்த சகோதரரால் ஆதாயம் உண்டு. இளைய சகோதரர்களுடன் இருந்து வந்த மனத்தாங்கல் நீங்கும். விலையுயர்ந்த தங்க ஆபரணம் வாங்குவீர்கள். வெளிநாட்டில் இருப்பவர்கள் உதவுவார்கள். இனிகோபப்படாமல் பேசுவீர்கள். உங்கள் ராசிக்கு 3ஆம் வீட்டை குரு பார்ப்பதால் பதவி, பட்டம் பெறுவீர்கள். சொந்த ஊரில் மதிக்கப்படுவீர்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவ முன்வருவார்கள்.

**குருபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**

01.05.2024 முதல் 12.06.2024 வரை உங்களின் ஜீவனாதிபதியான சூரியனின் கார்த்திகை நட்சத்திரத்தில் குரு பயணிப்பதால் சாதித்துக் காட்டுவீர்கள். தடைப்பட்டுக் கொண்டிருந்த காரியங்களெல்லாம் முடிவுக்கு வரும். எதிலும் வெற்றி கிடைக்கும். புது வேலை வாய்ப்புகள் அமையும். சொத்து சம்பந்தப்பட்ட வழக்குகள் சாதகமாக முடியும். தள்ளிப்போன திருமணம் கூடி வரும். வீடு, மனை வாங்க வங்கிக் கடனுதவி கிடைக்கும்.

12.06.2024 முதல் 19.08.2024 வரை மற்றும் 02.12.2024 முதல்05.04.2025 வரை உங்களின் பாக்கியாதிபதியான சந்திரனின் ரோகிணி நட்சத்திரத்தில் குரு செல்வதால் பணவரவு அதிகரிக்கும். தந்தைக்கு மருத்துவச் செலவுகள் குறையும். தந்தை வழி உறவினர்களால் ஆதாயமுண்டு. நிரந்தர வருமானத்திற்கு வழி தேடுவீர்கள். விலையுயர்ந்த ஆடை, அணிகலன்கள் வாங்குவீர்கள். புது வாகனம் அமையும்.

19.08.2024 முதல் 02.12.2024 வரை மற்றும் 05.04.2025 முதல் 14.05.2025 வரை உங்கள் ராசிநாதனான செவ்வாயின் மிருகசீரிஷம் நட்சத்திரத்தில் குரு செல்வதால் திடீர்யோகம் உண்டாகும். சொத்து வாங்குவீர்கள். ராஜ தந்திரத்தால் வெற்றியடைவீர்கள். பெரிய பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவீர்கள்.

**வியாபாரம் :**

முடங்கிக் கிடந்த நீங்கள் புத்துயிர் பெறுவீர்கள். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் வியாபாரத்தை விரிவுபடுத்த வங்கிக்கடனுதவி கிடைக்கும். புது வாடிக்கையாளர்கள் அதிகரிப்பார்கள். அனுபவமுள்ள வேலையாட்களைக் கூடுதலாக நியமிப்பீர்கள். உணவு விடுதி, வாகன உதிரிப் பாகங்களால் இலாபமடைவீர்கள். கூட்டுத்தொழிலில் பிரச்சினைகள் ஓயும். வராது என்றிருந்த பழைய பாக்கிகள் வந்துசேரும்.

**உத்தியோகம் :**

ஓடி ஓடி வேலை பார்த்தும் கெட்ட பெயர்தானே கிடைத்தது... இனி அந்த நிலை மாறும். மேலதிகாரியின் சொந்த விடயங்களில் தலையிடும் அளவிற்கு நெருக்கமாவீர்கள். பெப்ரவரி மாதத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். அயல்நாட்டுத் தொடர்புடைய நிறுவனங்களில் இருந்து நல்ல வாய்ப்புகளும் தேடி வரும். கணினித் துறையினர்கள் இழந்த சலுகையை மீண்டும் பெறுவார்கள். கலைஞர்களே! மறைந்து கிடந்த உங்கள் திறமையை வெளிக்கொண்டுவர நல்ல நிறுவனம் அமையும்.

**இந்தக் குருப் பெயர்ச்சி
வருங்கால வாழ்விற்கு அடித்தளம்
அமைத்துத் தருவதுடன் மனநிம்மதியையும்
தருவதாக அமையும்.**

## சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், மே 14

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் முன்னெடுக்கப்படும் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச்சொற்பொழிவு, ஆலய சண்முக விலாச மண்டபத்தில் சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்களின் ஆசியுரையினைத் தொடர்ந்து, 'திருஞானசம்பந்தரும் அருள் வாக்கும்' என்னும் விடயப்பொருளில் சைவப்புலவர், பிரசங்க பூஷணம் பொன். சந்திரவேலின் சிறப்புச்சொற்பொழிவும் நடைபெறும். (ப)

யாழ்ப்பாணம், மே 14

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகச் சிவநெறிப் பிரகாசர் சமய ஜோதி கதிகாமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்தத் திருவாசகச் சொற்பொழிவுத் தொடர் சிறுப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. இளஞ்சைவப்புலவர் பிரசங்கச் சுடர் க.கயிலைவாசன் 'மாணிக்க வாசகரும் திருச்சதகமும்' எனும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றுவார். சொற்பொழிவில் இருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஒ-இ)

## உறுப்பினர்களை நியமிப்பதற்கு நேர்முகத்தேர்வு

யாழ்ப்பாணம், மே 14

சண்டிலிப்பாய் மத்தியஸ்த சபைக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கான நேர்முகத் தேர்வு, சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக சிறு மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. சண்டிலிப்பாய் உதவிப் பிரதேச செயலாளர், நீதி அமைச்சின் கட்டடப் பிரிவுப் பொறியியலாளர், யாழ். மாவட்டச் செயலக மத்தியஸ்த பயிற்சி உத்தியோகத்தர் ஆகியோர் நேர்முகத் தேர்வின் தேர்வாளர்களாகக் கலந்துகொண்டனர். (டி-66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தாய்வழியில் வீண் செலவுகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்லவும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. தாய்மாமன் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**இடபம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். கொடுத்த கடன் திரும்பக் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிக்கும் திறன் அதிகரிக்கும்.

**கடகம்:** மகிழ்ச்சி தரும் நாள். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால்சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.தந்தைவழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் சற்றுக் கவனம் தேவைப்படுகிறது.

**கன்னி:** சுறுசுறுப்பாகச் செயற்படும் நாள். இளைய சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றும் வகையில் சற்று அலைச்சலும் சோர்வும் ஏற்படும்.

**துலாம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பணப்புழக்கம் இருந்தாலும் திடீர்ச் செலவுகளால் கையிருப்புக் குறையக்கூடும். வியாபாரத்தில்விற்பனை சற்று மந்தமாகத்தான் இருக்கும்.

**விருச்சிகம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. குடும்பப் பொறுப்புகளின் காரணமாக அலைச்சல் ஏற்படும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

**தனுசு:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரம் சுமாராகத்தான் இருக்கும்.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் பண உதவி கேட்டு வருவார்கள். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கக் காரியம் அனுகூலமாக முடியும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிட முடியும்.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். சிலருக்கு தந்தையுடன் மனக்கசப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அவருடன் அனுசரணையாக நடந்துகொள்ள முயற்சி செய்யவும்.

**மீனம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். அடிக்கடி மனதில் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். தாயின் தேவையை நிறைவேற்ற சிறிது அலையவேண்டியிருக்கும். உடல்நலனில் கவனம் தேவை. வீட்டில் பொறுப்புகள் அதிகரிக்கும் என்பதால் சற்றுச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நாடகம் போடும் அரசு

'திருகோணமலையில் நினைவேந்தலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தி, அவர்களைக் கைது செய்துமிருக்கிறது சிறிலங்கா அரசு. இது கண்டிக்கத்தக்கது.

15 வருடங்களுக்கு முன்னர் சிறிலங்கா அரசாங்கத்தின் ஈவிரக்கமற்ற இனப்படுகொலையை தமிழர்கள் நினைவேந்தும் இந்தத் தருணத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி என்பது காயங்களை ஆற்றும் கூட்டு நினைவேந்தலின் ஒரு பகுதியாக மாறியுள்ளது. தங்கள் நேசத்துக்குரியவர்களை நினைவுகூரும் தமிழர்களை துன்புறுத்தும் - அச்சுறுத்தும் - கைதுசெய்யும் இலங்கை அரசாங்கம் நல்லிணக்கத்துக்கான முயற்சிகளில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கமுடியாது. கடந்த வருடம் வெசாக்கை முன்னிட்டு சிறிலங்கா பொலிஸார் உள்ளூர் மக்களுக்கு பிஸ்கட்கள் போன்றவற்றை வழங்கியிருந்தனர். ஆனால் திருகோணமலை சம்பவம் அவர்களின் போலி நாடகத்தை வெளிப்படுத்தியுள்ளது' என பேர்ள் அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்புச் சுட்டிக்காட்டுவது நூற்றுக்கு நூறு வீதம் சரியானதே. சிறிலங்காவின் உண்மை முகத்தை அந்த அறிக்கை தோலுரித்துக்காட்டியிருக்கின்றது.


தமிழர்கள் மனதில் ஆறாத ரணமான முள்ளிவாய்க்கால் இனவழிப்பை நினைவுகூருவதற்குக் கூட தடைவிதிக்கும் கடைந்தெடுத்த அயோக்கியத்தனம் இலங்கையைத் தவிர வேறெங்கும் இருக்கப்போவதில்லை. கடந்த காலங்களிலும் தமிழர்கள் தங்கள் நினைவேந்தல்களைச் செய்வதற்கு சிறிலங்காவின் ஆட்சியாளர்கள் இடமளித்திருக்கவில்லை. கடுமையான சர்வதேச அழுத்தங்களைத் தொடர்ந்து வேண்டா வெறுப்பாக அதை அனுமதித்திருந்தாலும், ஏதோ ஓர் வகையில் அதைத் தடுப்பதற்கு - குழப்புவதற்கு அவர்கள் பகீரதப்பிரயத்தனத்தை மேற்கொண்டுதான் வருகின்றனர்.

சிங்கள - பௌத்த பேரினவாதத் திமிரே இந்த நாட்டின் குருதிச் சகதிக்கும் அதன் பின்னரான பொருளாதாரப் படுகுழியில் வீழ்வதற்கும் காரணம். சிங்கள-பௌத்த பேரினவாதத்தை நிலைநிறுத்துவதற்காக தமிழர்களை இனவழிப்புச் செய்வதற்காக நாடு நாடாக கடன் வாங்கி இன்று வங்குரோத்து நிலையில் வந்து நிற்கின்றது. இதன் பின்னரும் தன் கொள்கையை அது மாற்றிக்கொள்வதாகத் தெரியவில்லை. மாறாக இன்னும் தீவிரப்படுத்தியிருக்கின்றது.

சிறிலங்காவின் சிங்கள - பௌத்த பேரினவாத நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கும் முக்கியமான திணைக்களம் சிறிலங்கா பொலிஸ். பேர்ள் அமைப்பு சுட்டிக்காட்டுவதைப்போல, வெசாக் நாளில் பிஸ்கட் வழங்கும் அதே சிறிலங்கா பொலிஸ்தான், தமிழர்களின் நினைவு கூரலுக்கும் - முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கலுக்கும் முட்டுக்கட்டை போடுகின்றது. ஒரு கண்ணில் வெண்ணெயையும் மறு கண்ணில் சுண்ணாம்பையும் தடவுகிறது சிறிலங்கா பொலிஸ். இந்த வேறுபாட்டைச் சுட்டிக் காட்டும் பேர்ள் அமைப்பு இன்னொரு முக்கியமான விடயத்தையும் அம்பலப்படுத்தியிருக்கின்றது.

இப்படி இனப்பாகுபாட்டுடன் நடந்து கொள்ளும் சிறிலங்கா அரசாங்கம் நல்லிணக்க முயற்சிகளில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கமுடியாது என்றும் குறிப்பிட்டிருக்கின்றது. நல்லிணக்கத்துக்கான செயலணியை உருவாக்கி மற்றொரு நாடகத்துக்கு சிறிலங்கா அரசாங்கம் தயாராகி வருகின்றது. அது இதயபூர்வமான செயற்பாடல்ல, வெறும் நாடகமே என்பதை திருகோணமலைச் சம்பவமே தோலுரித்துக் காட்டியிருக்கின்றது.

வெறும் உதட்டளவில் நல்லிணக்கத்தைப் பற்றிப் பேசுவதால் பயனில்லை. அடிப்படையில் மாற்றம் வேண்டும். சிங்கள - பௌத்த மேலாதிக்க சிந்தனையிலிருந்து ஆட்சியாளர்கள் வெளிவரவேண்டும். அந்தச் சிந்தனைப் போக்கிலிருந்து சிறிலங்காவின் அரச திணைக்களங்கள் வெளிவரவேண்டும். இந்த மாற்றங்கள் நிகழாமல் எந்தவொரு மாற்றமும் நாட்டில் நடக்காது.






# இலங்கை - இந்தியா இணைப்பு தாக்கத்தை ஏற்படுத்தும் முயற்சி

## இந்தியத் தூதுவர் தெரிவிப்பு

**கொழும்பு, மே 14**

**இலங்கை - இந்திய நில இணைப்பு வழித்தடம் மிகவும் இலட்சியமானது மற்றும் சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தும் முயற்சி என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இரு நாடுகளுக்கும் இடையில் பாலம் கட்டப்பட்டால் இரு நாடுகளின் உறவை வலுப்படுத்தும், வளர்ச்சி மற்றும் செழுமையின் புதிய சகாப்தமாக மாறும். கொழும்புக்கு அப்பால் வடக்கு மற்றும் கிழக்கு உட்பட இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு விரிவடையும் வகையில் சுற்றுலாத்துறைக்கு நன்மைகள் இருக்கும்.

இந்தத் திட்டத்தின் சாத்தியமான தாக்கம் நமது சொந்தக் கற்பனையால் மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது. இது இந்தியா -இலங்கை கூட்டுக்கு மாற்றமாக இருக்கும் - என்றார். (ஒ-இ)

# மஹிந்தவின் பரப்புரைக்கு நிதியுதவி வழங்கிய சீனா

## நியூயோர்க் ரைம்ஸ் செய்தி வெளியீடு

கொழும்பு, மே 14

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது சீனாவின் துறைமுக பொறியியல் கூட்டுத்தாபனத்தின் ஊடாக மஹிந்த ராஜபக்சவுக்கு 7.6 மில்லியன் டொலர் வழங்கப்பட்டதாக நியூயோர்க் ரைம்ஸ் அண்மையில் செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் இறுதிக்கட்டத்தை அடைந்த நிலையில் 3.7 மில்லியன் டொலர் காசோலையாக வழங்கப்பட்டுள்ளது. 6.78 இலட்சம் டொலர் ரீசேட் அச்சிடுவதற்கும், 2.97 இலட்சம் டொலர் சேலைகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கும் வழங்கப்பட்டுள்ளது. 38 இலட்சம் டொலர் விகாரைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் ஜனாதிபதி அலுவலகத் தொண்டர்களுக்கு மாத்திரம் 1.7 மில்லியன் டொலர் வழங்கப்பட்டுள்ளது என்று அந்தச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஒ-6)

# மாதச்செலவு அதிகரிப்பு

கொழும்பு, மே 14

குடும்பம் ஒன்றின் மாதச்செலவு 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும்போது 2023 ஆம் ஆண்டில் 16.5 வீதத்தால் உயர்வடைந்துள்ளது.

பணவீக்கம காரணமாக இவ்வாறு மாதச் செலவு வெகுவாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ச-இ)

# தாமரைக் கோபுரத்திலிருந்து குதித்தவர் படுகாயம்

கொழும்பு, மே 14

கொழும்பு தாமரைக் கோபுரத்தில் இருந்து கீழே குதித்த வெளிநாட்டவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தாமரைக் கோபுரத்தில் இருந்து பரசூட் மூலம் கீழே குதித்தபோது அவர் காயமடைந்துள்ளார். (ஒ-இ)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் மன்னிப்புச்சபையின் செயலர்

கொழும்பு, மே 14



சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலர் அக்னெஸ் கலமார்ட் இவ்வாரம் இலங்கைக்கு வரவுள்ளார்.

எதிர்வரும் 18ஆம் திகதி இடம்பெறவுள்ள முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்விலும் அவர் கலந்து கொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-இ)

## நாளை

15.05.2024

**புதன்கிழமை**

**வைகாசி - 02**

சுபநேரம் : 04.23 - 05.53

ராகுகாலம் : 11.53 - 01.23

## நாளொரு நல்வார்த்தை

**சரியானதைச் செய்ய இதுவே சரியான நேரம்**

**- மார்ட்டின் லூதர் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதேச முதியோர் சங்கப் பிரதிநிதிகளுக்கான 'இயலளவு விருத்தி' என்னும் பயிற்சி வகுப்பு, தென்மராட்சிப் பிரதேச சமூக சேவைகள் அலகின் ஏற்பாட்டில் பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ப-9)






தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு மண்டலாபிஷேக நிறைவு நாள் உற்சவம் 1008 சிறப்புக் கலச சங்காபிஷேகத்துடன் அண்மையில் இடம் பெற்றது. (ம-66)

## அகிலத்திருநாயகிக்கு வீரமங்கை பட்டம்

விளையாட்டுத்துறையில் சாதனை படைத்த முள்ளியவளையைச் சேர்ந்த ஸ்ரீசெயானந்தபவன் அகிலத்திருநாயகி. 'முல்லையின் வீரமங்கை' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். முள்ளியவளை கிழக்கு பொது நோக்கு மண்டபத்தில், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ச.கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்டச் செயலர் எஸ்.ஜெயகாந்தன் கலந்துகொண்டார்.

அகிலத்திருநாயகி 2023ஆம் ஆண்டு தனது 72 ஆவது அகவையில் பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைபெற்ற 22ஆவது ஆசிய தடகளப் போட்டிகளில் இரண்டு தங்கப் பதக்கங்களையும், வெண்கலப் பதக்கத்தினையும் வென்று சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது. (ம-19)



பறவைகள் தினத்தை முன்னிட்டு இயற்கை ஊக்குவிப்பு கழகத்தால் பெரிய பூநாரைகளுடனான பயணவழிக் கற்றல் தொண்டைமானாறில் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது பறவைகள் சார் விடயங்கள் தொடர்பில் மக்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. (ச)

### ஜனாதிபதித் தேர்தல்

# அடுத்த மாதமே ரணிலின் முடிவு!

### இராஜாங்க அமைச்சர் ஜானக தெரிவிப்பு

கொழும்பு, மே 14

**தான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவாரா அல்லது இல்லையா என்பதை ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க அடுத்த மாதம் அறிவிப்பார் என்று இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கடந்தகால தேர்தல்களை பரந்தப்பட்ட கூட்டணியின் கீழ்தான் பொதுஜன பெரமுன சந்தித்தது. இம்முறை யும் உரிய வகையில் களமிறங்கு வோம். தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் வேட்பாளர் தொடர்பான அறிவிப்பு வெளியாகும், அதுவரை காத்திருப்போம். நெருக்கடியான சூழ்நிலையில் ஏனைய நாடுகளால் செய்ய முடியாத விடயங்களைக் கூட எமது அரசு செய்துள்ளது. இருந்த நிலையைவிட நாடு தற்போது சிறந்த நிலையில் உள்ளது. 2015ஆம் ஆண்டில் மஹிந்தவை வெற்றிபெற வைப்பதற்காக நாம் செய்யாத விடயங்கள் இல்லை. எனினும், அவர் தோல்வி அடைந்தார். எனவே, மக்கள் தொகையைக் காட்டி வெற்றி தமக்குதான் என முன்கூட்டியே கூறிவிட முடியாது" -என்றார். (ம-44)

## கடந்த 4 மாதங்களில் 37 மதுபான அனுமதி

கொழும்பு, மே 14

இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் மதுவரித்திணைக்களத்தால் 37 மதுபான விற்பனை அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

2023ஆம் ஆண்டு 214 மதுபான விற்பனை அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் 147 அனுமதிப் பத்திரங்கள் உல்லாசப்பயணத் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. மதுவரித்திணைக்களம் இதுவரை ஆயிரத்து 8 மதுபான விற்பனை அனுமதிப்பத்திரங்களை விநியோகித்துள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-6)

### ஆசியாவில்


## விசாவுக்குக் கட்டணம் இலங்கையில் அதிகம்!

கொழும்பு, மே 14

ஆசியாவிலேயே கூடுதலான விசா கட்டணம் அறவிடப்படும் நாடாக இலங்கை பதிவாகியுள்ளது.

தனியார் நிறுவனம் மூலம் விசா வழங்கப்படுகையில் 100 டொலர் விசா கட்டணமாக அறவிடப்படுகிறது. நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பம் சுற்றுலாவை கழிக்க வருவதாயின் 400 டொலரை விசா கட்டணமாகச் செலுத்தவேண்டும்.

ஏனைய ஆசிய நாடுகளில் 20 தொடக்கம் 40 டொலரே விசா கட்டணமாக அறவிடப்படும் நிலையில் இலங்கை 100 டொலரை விசா கட்டணமாக அறவிடுவது சுற்றுலாத் துறையைப் பாதிக்கும் என்றும் ஆர்வலர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ச-6)



இலங்கை தமிழரசுக் கட்சியின் வடமராட்சிக் கிளையின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு அண்மையில் நெல்லியடியில் நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நிகழ்வில் கலந்து கொண்டார். (ம-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BID – PSDG
## Maintenance works & Council Fund works
## Urban Council, Vavuniya- 2024

The Chairman, Procurement Committee (PC) on behalf of Urban Council, Vavuniya invite sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.

| No | Contract No | Description of Work | TEC Cost (Mn) | | Contract Period | Required Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Security Amount | Validity Period |
| | | **Package – 06- 2024** | | | | | | |
| 1 | NP/14/43(2)/ 06/WD/PSDG. Ma/20/2024 | Improvement of Maathiri Uraivida Veethy (NVVUE027) | 0.50 | 3.81 | 84 Days | C8 and C7 (Highway) | 39,000.00 | 27.08.2024 |
| | | Improvement of Mannar Road 7th lane (NVVUE044) | 0.67 | | | | | |
| | | Improvement of Poonthoddam Periyaarkulam Road (NVVUE058) | 0.21 | | | | | |
| | | Improvement of Satin Poonthodda Veethy (NVVUE086) | 0.33 | | | | | |
| | | Improvement of SLRC Road (NVVUE089) | 0.12 | | | | | |
| | | Improvement of Vairavar Kovil 1st lane (NVVUE091) | 0.12 | | | | | |
| | | Improvement of Vairavar Kovil 2nd lane (NVVUE092) | 0.16 | | | | | |
| | | Improvement of Paddanichoor Paddakadu Road (NVVUE039) | 1.27 | | | | | |
| | | Improvement of Vairavar Kovil 3rd lane (NVVUE093) | 0.12 | | | | | |
| | | Improvement of Vairavar Kovil 10th lane (NVVUE099) | 0.12 | | | | | |
| | | Improvement of Kovil puthukulam 7th lane (NVVUE173) | 0.12 | | | | | |
| 2 | NP/14/43(2)/ 06/WD/CF/ 21/2024 | Construction of 600mmX600mm drainage, lined channel Hospital circular road, UC, Vavuniya. | 4.00 | 4.00 | 84 Days | C8 and C7 (Highway) | 40,000.00 | 27.08.2024 |
| | | **Package – 07- 2024** | | | | | | |
| 3 | NP/14/43(2)/ 06/WD/DS/ 22/2024 | Improvements to Satin PoonthoddaVeethy (NVVUE 086) | 1.02 | 3.54 | 84 Days | C8 and C7 (Highway) | 36,000.00 | 27.08.2024 |
| | | Improvements to Vairavar kovil 6th lane (NVVUE 095) | 0.28 | | | | | |
| | | Improvements to Vairavar kovil 7th lane (NVVUE 096) | 0.17 | | | | | |
| | | Improvements to Vairavar kovil 10th lane (NVVUE 099) | 0.24 | | | | | |
| | | Improvements to SLRC road (NVVUE 089) | 0.10 | | | | | |
| | | Improvements to Veppankulam 60 acre road (NVVUE 116) | 1.06 | | | | | |
| | | Improvements to Mannar road 7th lane (NVVUE 044) | 0.67 | | | | | |
| | | **Package – 08- 2024** | | | | | | |
| 4 | NP/14/43(2)/ 06/WD/CF/ 23/2024 | Construction of Metalling &Tarring work at Kovil puthukulam 5th lane cross road (NVVUE177) | 2.12 | 3.81 | 84 Days | C8 and C7 (Highway) | 39,000.00 | 27.08.2024 |
| | | Construction of Metalling & Tarring Katkuli 2nd 3rd connecter road at Katkuli | 1.69 | | | | | |
| 5 | NP/14/43(2)/ 06/WD/CF/ 24/2024 | Improvements to AvaiyarVeethy | 2.12 | 2.12 | 84 Days | C8 and C7 (Highway) | 22,000.00 | 27.08.2024 |
| | | **Package – 09- 2024** | | | | | | |
| 6 | NP/14/43(2)/ 06/WD/CF/ 25/2024 | Expenses necessary to be incurred for the construction of plastic coated wire mesh fencing to Kalaimahal ground in UC area. | 0.85 | 1.70 | 84 Days | C9 and C8 (Building) | 17,000.00 | 13.08.2024 |
| | | Expenses necessary to be incurred for the construction of plastic coated wire mesh fencing to UC ground in UC area. | 0.85 | | | | | |
| 7 | NP/14/43(2)/ 06/WD/DS/ 26/2024 | Improvements of Urban Council Quarters | 1.16 | 1.16 | 84 Days | C9 and C8 (Building) | 12,000.00 | 13.08.2024 |
| 8 | NP/14/43(2)/ 06/WD/PSDG st/26/2024 | Construction of Metalling & Tarring work at Kovil puthukulam 2nd & 3rd lane connecting lane (NVVUE179) | 2.51 | 2.51 | 84 Days | C8 and C7 (Highway) | 26,000.00 | 27.08.2024 |

1) Bidding will be conducted through National competitve bidding Procedure (NCB). The Regional Preference shall be apply as stipulated in "Public Finance Circulars No.04/2016(ii), 04/2016(iii) and its amendments respectively will also be adopted."
2) To be eligible for contract award, the successful bidders shall not have been blacklisted and shall have been registered in the field of Road and Building Construction for grade mentioned in the table below with the institute for Construction, Training and Development (ICTAD) /Construction Industry Development Authority. .
3) Qualification requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Section 5 of the bidding document.
4) Interested bidders may obtain further information from Secretary, Urban Council, Vavuniya – (Telephone. No 024-2222275, fax- 024-2222736) and inspect the bidding documents at the address Urban Council, Vavuniya from any working days 9.00 hrs to 14.30 hrs till 27.05.2024.
5) A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Secretary, Urban Council, Vavuniya from 13th May 2024, until 27th May 2024 from 09.00 hrs to 14.30 hrs. Upon payment of a non-refundable fee of Three Thousand Rupees (Rs.3,000.00) for over 2 million estimated works and Two Thousand Rupees (Rs.2,000.00) for below 2 million estimated works.The method of payment will be by cash.
6) Bids shall be delivered to the address Secretary, Urban Council, Vavuniya on or before 10.30 am hrs on 28th May 2024. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
7) Bids shall be valid up to 63 days (Sixty three, 30th July 2024) after the deadline for Bid Submission. [No.6 & 7 Bids shall be valid up to 49 days(Forty Nine, 16th July 2024) after the deadline for Bid Submission].
8) Bids shall be accompanied by a bid security as per the information given in the table.
9) The pre bid meeting will be held on 16th May 2024 at 10.30 am at Urban council, Vavuniya Interested bidders may attend the pre bid meeting at their own expenses.

Secretary,
Urban Council,
Vavuniya.
13.05.2024

## வேலைநிறுத்தம்

கொழும்பு, மே 14 ஊதிய உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக் கைகளைவலியு றுத்தி, அனைத் துப் பல்கலைக் கழகங்களின் கல்விசாரா ஊழியர்களால் மே மாதம் 2ஆம் திகதி முதல் தொடர்ச்சியாகப் போராட்டம்முன் னெடுக்கப் பட்டுள்ளது. சம்பள இடர்பாட் டுக்கான தீர்வைத் தருமாறு பல் கலைக்கழகங்க ளின் கல்விசாரா ஊழியர்கள் கடந்த எட்டு வருடங்களாகக் கோரிக்கை விடுக்கின்றபோதி லும் இன்னமும் தீர்வொன்று வழங்கப்பட வில்லை. இந்த நிலையிலேயே அனைத்துப் பல்க லைக்கழகங்க ளின் கல்விசாரா ஊழியர்களும் கடந்த 2 ஆம் திகதிமுதல் தொடர்ச்சியான வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற னர். (அ-ம-125)

## நினைவேந்தல்!

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தின் இரண்டாவது நாளான நேற்று யாழ். தீவகம் அல்லைப்பிட்டி படுகொலை இடம்பெற்ற இடத்தில் தீவகம் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட் டில் முள்ளி வாய்க்கால்நினை வேந்தல் நிகழ் வும் முள்ளி வாய்க்கால் கஞ்சி வழங்குகின்ற நிகழ்வும் நடை பெற்றது. தீவக மறைக் கோட்ட முதல்வ ரும் அல்லைப் பிட்டி பங்குத்தந் தையுமான பேணார்ட் றெக்னோ அடிகளார், சமூகச் செயற் பாட்டாளர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸ் காவல்!

யாழ்ப்பாணம், மே 14

சாட்டிக் கடற்கரையில் நேற்றுமுன்தினம் வெடிமருந்து மற்றும் ஆயுதங்களோடு ஒருவரை விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்த நிலையில் அவரை பொலிஸ் காவலில் வைத்து விசாரிப்ப தற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கி யுள்ளது.

சந்தேகநபர் நேற்று திங்கட்கிழமை ஊர் காவற்றுறை நீதிமன்றத்தில் முன் னிலைப்படுத்தப்பட்டபோதே அவரைத் தடுப்புக் காவலில் வைத்து விசாரிப்ப தற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது. சந்தேநபரிடமிருந்து 3 கிலோகிராம் 145 கிராம் வெடிமருந்து, 8 ஆர்.பி.ஜி. குண் டுகள், 12 மோட்டார் ஷெல் என்ப வற்றைக் கைப்பற்றிய நிலையில் சம்ப வத்துடன் தொடர்புடைய சந்தேகநப ரான மண்கும்பான் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-125)


## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், மே 14

முள்ளிவாய்க்காலில் கொன்று குவிக் கப்பட்ட பொதுமக்களை அஞ்சலிக்கும் முகமாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழ கத்தில் இன்று குருதிக்கொடை முகா மொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. காலை 9 மணிமுதல் பி.ப.3.30 மணி வரை இந்தக் குருதிக்கொடை முன்னெ டுக்கப்படவுள்ளது. (ம)

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 - 09 - 1944



மறைவு 12 - 05 - 2024

### நாகப்பர் மாணிக்கம்

(ஓய்வு பெற்ற நில அளவை படவரைஞர், பகுதி நேர ஆங்கில ஆசிரியர் - ஹாட்லி கல்லூரி, மொழிபெயர்ப்பாளர்)

கல்லூரி வீதி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட நாகப்பர் மாணிக்கம் அவர்கள் (12.05.2024) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகப்பர் - பார்வதி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான வடிவேலு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சந்திராதேவி அவர்களின் அன்புக் கணவரும், சதீஷ் (மேற்பார்வை - பொதுச் சுகாதார பரிசோதகர் - வேலணை), பிரதீஷ் (உதவிப் பொறியியலாளர் - நீர்ப்பாசனத் திணைக்களம் - மன்னார்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வல்லிபுரம் மற்றும் காலஞ் சென்றவர்களான தம்பிமுத்து, சின்னத்துரை, கனகம்மா, தங்கமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், வாமதேவன் மற்றும் காலஞ்சென்ற வர்களான ஜெயச்சந்திரன், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், தர்மினி (முகாமைத்துவ உதவியாளர் - மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணம்), மயூரி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிநாத், டினுஷ்றி, தர்ணியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2024) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
மா.சதீஷ் - 077 408 3661
மா.பிரதீஷ் - 077 071 9869

(CS 55068) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 • 02 • 1953



மறைவு 13 • 05 • 2024

### வனஜா கணேசலிங்கம்

அரியாலை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வனஜா கணேசலிங்கம் நேற்று (13.05.2024) திங்கட் கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான லீலாவதி - நமசிவாயம் தம்பதிய ரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கணேசலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும், சர்மினி, அருந்தினி, யாதவனி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான துரைரட்ணம், பிரணவநாதன், இலங்கேஸ்வரி, வசந்தகுமாரி மற்றும் அன்னலட்சுமி, செல்வராசா, தேம்பாமலர் மற்றும் உருத்திரேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி தங்கலட்சுமி மற்றும் முத்துலிங்கம், அமிர்தலிங்கம், ஞானலிங்கம், பரதலிங்கம், ஜெயலட்சுமி, விஜயலட்சுமி, யோகலிங்கம், ஆனந்த லிங்கம் ஆகியோரின் மைத்துனியும், சத்தியகீர்த்தி, பிரேம் ஆனந், மாறியோ மசினெட் தீபன் ஆகியோரின் அன்பு மாமியாரும், யாகவி, நித்தியதி, அக்ஷவி, நிர்சிகா, கேஷவி ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2024) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக் காக பிற்பகல் 3.00 மணியளவில் சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

இல.20/17, ஆள்காட்டி வளவு வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.
077 248 7305 / 077 406 9668

தகவல்:
குடும்பத்தினர்

(cs 55065) (N-1)

## மரண அறிவித்தல்

### சிறிதரன் புஸ்பராணி (செல்வராணி)



மண்டைதீவு 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், G.P.S விளையாட்டரங்க வீதி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சிறிதரன் புஸ்பராணி (செல்வராணி) அவர்கள் கடந்த 11.05.2024 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை - பவளம்மா அவர்களின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்றவர்களான நாகராசா கல்யாணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகராசா சிறிதரன் அவர்களின் அன்பு மனைவியும், பரிமளாகாந்தி, சிவசாந்தன், குணசாந்தன், தவசாந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிறிரஞ்சினி, ரஞ்சித், சுபாஷினி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற யூட்அருளானந்தம் (ஜனா), டனிஷா, அனாஸ் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஆர்த்தீகன், அபிஷனா, அக்ஷனா, நிதுஷா, பிரணிக்கா, ஆதில், அம்னா, ஆசிப், ஆயிஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2024) செவ்வாய்க்கிழமை G.P.S விளையாட்டரங்க வீதி, கல்வியங்காட்டிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 11.04.1957 — மறைவு 11.05.2024

தகவல்:
குடும்பத்தினர்.
தொடர்புகளுக்கு:
076 602 6971

(CS/55061) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டயானாவைப் போன்று

# தகுதியற்ற பலர் நாடாளுமன்றில்!

## உடன் வெளியேறவேண்டும் என ஓமல்பே சோபித தேரர் முழக்கம்


கொழும்பு, மே 14

உச்ச நீதிமன்றத்தால் தகுதியற்றவர் என்று நிராகரிக்கப்பட்ட டயானாவைப் போன்று, மேலும் பலர் நாடாளுமன்றத்தில் உள்ளனர் என்று ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் தாமாகவே நாடாளுமன்ற உறுப்புரிமைகளைத் துறந்துவிட்டுச் செல்லவேண்டும் என்றும் சோபித தேரர் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இரட்டைக் குடியுரிமை மற்றும் குடியுரிமைச் சிக்கல்களால் பதவி இழந்த டயானா கமகேயைப் போன்று, நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிப்பதற்குத் தகுதியற்ற மேலும் பத்துக்கும் மேற்பட்டவர்கள் தற்போதும் நடாளுமன்றத்துக்குள் உள்ளனர். அவர்கள் தொடர்பான தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளன. இவ்வாறு இரட்டைக் குடியுரிமையைப் பெற்றுக்கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பதவி வகிப்பவர்கள் கௌரவமான முறையில் விலகிச் செல்லவேண்டும்.



சட்டத்தை மதிக்காத நபர்களை கட்சியின் பிரதிநிதிகளாக சேர்த்துக்கொள்ளாமல் இருக்கும் பொறுப்பு கட்சித் தலைவர்களுக்கு உள்ளது.

எனவே, உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்போது அவர்கள் தொடர்பில் கட்சிகளாலும் கட்சிகளின் உயர்பீடங்களாலும் ஆராயப்பட வேண்டும் - என்றார். (அ-44)



## குஜராத் வெளியேற்றம்

அஹமதாபாத், மே 14

ஐ.பி.எல். தொடரில் பிளேஓவ் சுற்றுக்குச் செல்லும் வாய்ப்பை நேற்றுடன் முற்றுமுழுதாக இழந்தது குஜராத். நேற்றைய ஆட்டத்தில் குஜராத் மற்றும் கொல்கத்தா அணிகள் பலப்பரீட்சை நடத்துவதாக இருந்தது. மழை காரணமாக இந்த ஆட்டம் கைவிடப்பட்டதைத் தொடர்ந்து ஆட்டம் கைவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டு இரண்டு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி பகிர்ந்து வழங்கப்பட்டது. மழையால் ஆட்டம் கைவிடப்பட்டதையடுத்து தொடரில் இருந்து குஜராத் வெளியேறியது. (ம)


ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு
2024 ஆம் ஆண்டு உயர் திருவிழாவிற்கான ஒலி/ஒளி அமைப்புக்கான கூறுவிலை கோருதல்

கோவிலின் 2024 ஆம் ஆண்டு உயர் திருவிழாவிற்கான ஒலி,ஒளி அமைப்பு சேவைக்கான பொருட்கள் கூலிகள் உள்ளடங்கலாக கூறுவிலைலகள் கோரப்படுகின்றது. கூறுவிலையினைச் சமர்ப்பிக்க விரும்புபவர்கள் கோயிலின் காரியாலயத்தில் கூறுவிலைப் படிவத்தினைப்பெற்று பூரணப்படுத்தி 23.05.2024 ஆம் திகதி மாலை 05.00 மணிக்கு முன்னதாக காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியினுள் சேர்ப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன் பதிவு அஞ்சல் மூலம் அனுப்ப விரும்புபவர்கள் இடதுபக்க மேல் மூலையில் "2024 ஆம் ஆண்டுக்கான ஒலி,ஒளி அமைப்பு சேவைக்கான கூறுவிலை" எனக் குறிப்பிட்டு செயலாளர் அறங்காவலர்சபை ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில் நயினாதீவு என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

ந.மோகனரூபன்
செயலாளர்
அறங்காவலர்சபை
ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில்
நயினாதீவு.

(CR/42439) J-1

கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலிட்டி உப அலுவலக
ஊழியர் நலன்புரிச்சங்க அங்கத்தவரான
திரு. தெய்வேந்திரராசா ஜெயரூபன் அவர்களின் அன்புத்தந்தை
வீராச்சாமி தெய்வேந்திரராசா
2024.05.13 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.
அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன்
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
ஊழியர் நலன்புரிச்சங்கம்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை, மயிலிட்டி உப அலுவலகம்,

(cr.42433) (N-1)

கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வடக்கு பிரதேசசபையில் கடமையாற்றும்
திரு.தெய்வேந்திரராசா ஜெயரூபன் அவர்களின் அன்புத் தந்தை
வீராச்சாமி தெய்வேந்திரராசா
2024.05.13 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.
அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன்
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
ஊழியர் நலன்புரிச்சங்கம்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை,

(cr.42434) (N-1)

திருநெல்வேலி சிமாட் கிட்ஸ்
நிறுவனத்துக்கு
முகாமைத்துவ உதவியாளர் (பெண்) தேவை
கணினி அறிவு மற்றும் கணக்குப் பதிவியல் (Book Keeping) அறிவு பரிசீலிக்கப்படும்.
077 386 7458, 021 221 6933

NOTICE ON AMENDMENT
INVITATION FOR BID 2024/03
REGIONAL DIRECTORATE OF HEALTH SERVICES, JAFFNA.

1. This has reference to the Newspaper Notice on above subjects on Uthayan Newspaper dated 2024.05.08 on page 12.
2. The Non-Refundable Fees of IFB 2024/03 shall be amended as follows,
Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).

| Bid No | Description of work | Published in IFB 2024/03 | Amended in IFB |
|---|---|---|---|
| NP/04/41/2024/PSSP/W/20 | Construction of Generator Room at BH Chavakachcheri | Non-Refundable fee was Rs 1,500.00 | Non-Refundable fee is Rs 3,500.00 |

3. All the interested Bidders are requested to refer this "Notice" in conjunction with the Original IFBs dated 2024.05.08
The original IFBs remain same except the amendments mentioned above.

Chairman
Regional Procurement Committee
Office of Regional Director of Health Services, Jaffna.

(cr.42436) (N-1)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும்
திவச ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



கடந்த 26.05.2023 அன்று இறைபதம்
அடைந்த எமது அம்மா (குடும்ப தலைவி)
அமரர்
சின்னத்துரை குஞ்சுமணி
(மணி)

அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (14.05.2024) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
குமார் - 077 33 97 390
வாசன் - [illegible]

கச்சாய் தெற்கு, கொடிகாமம்.

Obituary



In Loving memory
of
Sr.
Helen Teresa A.C

Born 10.12.1943
Died 12.05.2024

Funeral was held on 13.05.2024

I am the resurrection and the life.
He who believes in me, though he may die, He shall Life.
(John 11.25)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பசுக்கொலை புரியும் பாவச் செயலை இனிமேல் தவிர்க்கவேண்டும்

*சிவசேனை அமைப்பின் முக்கியஸ்தர் என்.பி.சிறீந்திரன் தெரிவிப்பு*

**யாழ்ப்பாணம், மே 14**

**சிவபூமியில் முஸ்லிம்கள், பசுக்கொலை புரியும் படுபாவச் செயல், எதிர்வரும் காலங்களிலும் தொடரும் பட்சத்தில் வடமாகாணத்தில் பெரும்பான்மையாக வாழும் இந்துக்கள், முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்களில் பொருள்களைக் கொள்வனவு செய்யாது புறக்கணிக்க வேண்டும் என்ற திட்டத்தையும், தொடர் போராட்டங்களையும் நாங்கள் முன்னெடுப்போம் என இலங்கை சிவசேனை அமைப்பின் முக்கியஸ்தர் என்.பி.சிறீந்திரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

தமிழ்மக்கள் பசுக்களைச் சட்டவிரோதமாகக் கொல்வதை எதிர்த்தும், பசுவதைத் தடைச் சட்டத்தைக் கோரியும் இலங்கை சிவசேனை அமைப்பின் ஏற்பாட்டில், நல்லூர் நல்லை ஆதீனம் முன்பாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்ட கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போது அவர் மேலும் தெரிவிக்கையில்;

பசுக்களைக் கொலை செய்து இறைச்சியாக்கி உண்ணுகின்ற படுபாதகச் செயல் யாழ். மண்ணில் இடம்பெற்றிருப்பது வேதனையளிக்கின்றது. இத்தகைய செயல் இன்று, நேற்றல்ல மிக நீண்டகாலமாக முஸ்லிம்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எமது மண்ணில் பல நூற்றுக்கணக்கான பசுக்கள் களவாடப்பட்டுக் கொலை செய்யப்பட்டுப் புசிக்கப்பட்டு வருகின்றன. இந்துக்களாகிய நாங்கள் இவற்றை இனியும் கண்டும் காணாதது போல இருக்கமுடியாது - என்றார். (ப-66)



தீவகம் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில், வேலணை வங்களாவடியில் அமைந்துள்ள நினைவுத்தூபியில் முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை, நடைபெற்றது. (ப-125)





## முழங்காவிலில் சோதனை உணவகங்கள் பல சிக்கின

கிளிநொச்சி, மே 14

முழங்காவில் நாச்சிக்குடாப் பகுதியில் சுகாதாரமுறை பேணாது செயற்பட்ட உணவகங்களுக்கும், நுகரத் தகுதியற்ற உணவுகளை வைத்திருந்த பல உணவகங்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முழங்காவில் நாச்சிக்குடாப் பகுதியில் பூநகரி மேற்பார்வை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் தலைமையில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் குழு கடந்த சனிக்கிழமை அங்குள்ள உணவகங்களில் திடீர்ச் சோதனைகளை முன்னெடுத்தது.

இதன்போதே பழுதடைந்த உணவுப் பொருள்களை களஞ்சிய அறையில் பேணியமை, எலி எச்சங்களுடன் கூடிய அலுமாரியில் உணவுப் பொருள்களைப் பேணியமை, மருத்துவச் சான்றிதழ் இன்றி உணவு கையாண்டமை ஆகியவற்றுக்கு எதிராக உணவகங்கள் மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் நுகர்வுக்குத் தகுதியற்ற நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட பாண், பணிஸ், கொத்துறொட்டி, சோறு, இறைச்சி என்பவையும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. (சு-9)



## கௌரவிப்பு நிகழ்வு

புத்தளம், மே 14

சேனைக்குடியிருப்புப் பிரதேச மக்களுக்கு நிவாரண உதவிகள், மாணவர்களுக்கான கல்விச் செயற்றிட்ட உதவிகள், அறநெறிப் பாடசாலைகளுக்கான உதவிகள், ஆலயங்களின் கட்டுமானப் பணிகளுக்கான நிதிக் கொடுப்பனவுகள் எனப் பன்முகப் பணிகளுக்கான உதவிகளைச் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகம் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவதைப் பாராட்டிக் கௌரவிக்கும் முகமாக, சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள், 'சமூகச்சுடர்' எனும் சிறப்பு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

நிகழ்வில் புத்தளத்தைச் சேர்ந்த பொது அமைப்புகளின் நிர்வாகிகள், பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-66)

## பிரசவவிடுதி திறப்புவிழா

யாழ்ப்பாணம், மே 14

'மதன் பவுண்டேஷன்' நிறுவனத்தின் நிதி ஒதுக்கீட்டில், வல்வெட்டித்துறைப் பிரதேச மருத்துவமனையின், புனரமைப்புச் செய்யப்பட்ட பிரசவவிடுதி திறப்புவிழா, மாவட்ட மருத்துவக் அதிகாரி மருத்துவ கலாநிதி தெ.மாதவநாத் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் மதன் பவுண்டேஷன் நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் திருமதி வடிவேலழகன் தவராணி, நிறுவனத்தின் தலைவர் எஸ்.எஸ். ரஜீபன், நிறுவனத்தின் செயலாளர் சிந்துஜா மற்றும் உத்தியோகத்தர்கள், மேற்படி மருத்துவமனையின் பற் சத்திரசிகிச்சை நிபுணர் சிவகுமார், மருத்துவக் கலாநிதி சபேசன், நோயாளர் நலன்புரி சங்கப் பொருளாளர் முருகவேல் மற்றும் தாதியர்கள், சுகாதார தொழிலாளர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-159)





## முள்ளிவாய்க்கால் நினைவு வவுனியாவில் கடைப்பிடிப்பு

வவுனியா, மே 14

வவுனியாவில் போராளிகள் நலன்புரிசங்கத்தினரால் முள்ளிவாய்க்கால் நினைவுதினம் நேற்று முன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

நிகழ்வில் உயிரிழந்த அனைவருக்கும் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டதுடன், நினைவுத்தூபிக்கு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

நிகழ்வில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் மாவீரர் குடும்பங்கள், பொதுமக்கள், பொது அமைப்பினர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-18-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முள்ளிவாய்க்கால்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,
"யுத்தம் நடைபெற்றபோது கோத்தாபய ராஜபக்ச பாதுகாப்புச் செயலாளராக இருந்தார். யுத்தம் நடைபெறும் பகுதிகளில் 75 ஆயிரம் மக்கள் இருக்கின்றனர் என்று அவர் கூறினார். ஆனால், யுத்தம் முடிவடைந்த பின்னர் 4 இலட்சத்து 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வவுனியா இடைத்தங்கல் முகாம்களுக்குக் கொண்டுவரப்பட்டனர்.
75 ஆயிரம் மக்களுக்கு உணவனுப்பி, நான்கு இலட்சம் மக்களைப் பட்டினி போட்டு, பட்டினியால் மக்கள் கொல்லப்பட்டனர். 4 இலட்சம் மக்களில் எத்தனை பேர் பட்டினியால் கொல்லப்பட்டனர்? வரிசையில் கஞ்சிக்காக நின்ற குழந்தைகள் மீதுகூட குண்டுகள் வீசப்பட்டன. இவ்வளவும் இந்த மண்ணில் நடைபெற்றன.
இதைச் செய்தவர் கோத்தாபய ராஜபக்ச. 69 இலட்சம் சிங்கள வாக்குகளால் தான் வந்தவர், தனக்கு தமிழ் வாக்குகள் தேவையில்லை என மார்தட்டி ஆட்சிக்கு வந்த கோத்தாபய ராஜபக்சவை அதே சிங்கள மக்கள், அதே சிங்கள இளைஞர்கள் 'அரகலய' ஊடாக ஓடஓடக் கலைத்தார்கள். தர்மம் வென்றது. தர்மம் அவரை நாட்டில் இருந்து அகற்றியது. இருக்க இடமின்றி தெருத்தெருவாகத் திரிந்தார். அந்த இறந்துபோன முள்ளிவாய்க்கால் ஆத்மாக்கள் இன்றும் அவரை நிம்மதியாக உறங்க விடவில்லை. இந்தக் கொலைகள் காரணமாக ராஜபக்ச குடும்பம் எக்காலத்திலும் நிம்மதியாக இருக்கப் போவதில்லை, இதுதான் கர்மவினை. வரலாறு இதை படிப்பிக்கும்.

**கஞ்சிக்கும் கைதா?**

தமிழ் மக்களின் இனவழிப்பு வாரம் மே 12 ஆம் திகதி ஆரம்பமானது. திருகோணமலை, சீனன்வெளி கிராமத்தில் மக்களோடு இணைந்து முள்ளிவாய்க்கால் கஞ்சியை அருந்தினேன். ஆனால், சம நேரத்தில் மூதூர் பிரதேசத்தில், சேனையூர் எனும் கிராமத்திலும் மக்கள் முள்ளிவாய்க்கால் கஞ்சியைக் காய்ச்சினர்.
இறுதி யுத்தத்தில் உணவில்லாமல் மக்கள் பட்டினியோடு வாழ்ந்தபோது உப்பில்லாத அந்தக் கஞ்சி எத்தனை ஆயிரம் உயிர்களைக் காப்பாற்றி இருக்கின்றது? இது ஓர் அடையாளம். தமிழ் மக்களின் வரலாற்றில் கட்சி வேறுபாடின்றி, இன வேறுபாடின்றி மக்களிடம் இருக்கின்ற உணர்வுகளை வெளிப்படுத்துகின்ற மிகப்பெரிய அடையாளம்.
அந்த அடையாள நிகழ்வையே சேனையூர் மக்கள் செய்திருந்தனர். ஆனால், மூதூர் பொலிஸார் நேற்றிரவு (நேற்று முன்தினம்) மிருகங்களாக மாறி, மிகக் கேவலமாக கதறக்கதற பெண்களைக் கூடகைது செய்துள்ளனர். கஞ்சி காய்ச்சிக் கொடுத்தவர்களை இரவு நேரம் சென்றுதான், உடுத்திய உடையுடன் கதறக்கதற கைதுசெய்யவேண்டுமா?
இந்த நாட்டில் என்ன நடக்கின்றது? நாடு எதை நோக்கிப் பயணிக்கின்றது? பலரும் ஜனாதிபதித் தேர்தல் பற்றியும், வேட்பாளர்கள் குறித்தும் கதைக்கின்றனர். ஆனால், பொலிஸாரின் அராஜகம், அடாவடி நேற்றும் வெளிப்பட்டுள்ளது.
154 தமிழ் விவசாயிகள் சிங்களக் காடையர்களால் திருமலையில் அன்று வெட்டிப் படுகொலை செய்யப்பட்டனர். அதே போன்றதொரு பொலிஸ் அராஜகம் நேற்று (நேற்றுமுன்தினம்) திருமலை மண்ணில் அரங்கேறியுள்ளது.
சர்வதேச மன்னிப்புச் சபையின் பொதுச் செயலாளர் இலங்கை வருகின்றார் எனவும், முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் பங்கேற்பார் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. இங்கு நல்லிணக்கம் இல்லை, சமாதானம் இல்லை, பொலிஸ் அராஜகம் நிலவுகின்றது. கஞ்சி காய்ச்சுவதற்குக்கூட தமிழர்களுக்கு உரிமை இல்லை என்ற தகவலை நீங்கள் வருவதற்கு முன்னரே கூறி வைக்கின்றேன்" - என்றார். (அ-ம-44)

## எதிரணியின்...

மன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.
வடமராட்சியில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே சுமந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
திருகோணமலை - மூதூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சும் நினைவேந்தலை பொலிஸார் நீதிமன்றக் கட்டளை ஊடாகத் தடுத்துள்ளதாக அறிய முடிகிறது. நினைவேந்தல்கள் உலக நியமங்களிலே மிக முக்கியமானதொன்று. ஆகவே இதனைத் தடுக்கிறவர்கள் மிக மோசமான செயல்களிலே ஈடுபடுகிறார்கள். ஜனாதிபதிக்கு ஒரு செய்தியைச் செல்ல இருக்கிறோம். உங்களது கட்டளையின் பேரிலே அல்லது உங்கள் அமைச்சர்களின் கட்டளையின் பேரிலே நினைவேந்தல்களைத் தடுக்கிற நடவடிக்கைகள் எடுக்கப்படுமாக இருந்தால் வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் எமது மக்களிடம் வாக்குகளைக் கேட்டுவரவேண்டாம்.
பொது வாக்கெடுப்புக்கான அடையாளமாக தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தப் போகிறோம் என்று கூறுபவர்களுக்கு ஆதரவாகக் கூறும் செய்தியல்ல இது. அது வேறு விடயம். அது சம்பந்தமாக எமது கட்சி (தமிழ் அரசுக் கட்சி) வரும் 19ஆம் திகதி கூடி சரியாக ஆராய்ந்து ஒரு தீர்மானத்தை எடுக்கும்.
ஆகவே அது சம்பந்தமான வேறு விடயங்களை நான் தெரிவிக்க விரும்பவில்லை. ஏற்கனவே எமது கட்சியின் பெரும் தலைவர் இந்த விடயத்தில் அவசரப்பட்டு ஒரு முடிவினை எடுத்துவிட வேண்டாம் என்று அறிவித்திருக்கிறார். நாங்கள் அவருடைய கருத்தையும் ஏனையோருடைய கருத்தையும் சீராக ஆராய்ந்து பொருத்தமான முடிவுக்கு வருவோம் என்று தெரிவித்தார்.
ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பில் வடக்கு - கிழக்கில் பொது அமைப்புகள், அரசியல்கட்சிகள் கலந்துரையாடி வருகின்றன, இதற்கான பொதுவேட்பாளராக எம்.ஏ.சுமந்திரனை நிறுத்தலாம் என்று பேச்செழுந்துள்ளது. அது உண்மையா? உங்களிடம் இது பற்றி கேட்கப்பட்டதா? என்ற கேள்விக்குப் பதிலளித்த எம்.ஏ.சுமந்திரன், 'ஆம்' எனத் தெரிவித்ததுடன்,
உத்தியோகபூர்வமாக அனைவரும் இணைந்து இந்தக் கோரிக்கையை முன்வைக்கவில்லை. ஆனால், இந்தப் பேச்சுகள் எழுந்த வேளையிலே சுரேஷ் பிரேமச்சந்திரன் என்னிடம் ஒருதடவை இது தொடர்பில் கேட்டிருந்தார். அப்பொழுதே நான் என் நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளேன்.
அப்படியான தமிழ்ப் பொதுவேட்பாளராக நான் தேர்தலிலே போட்டியிடமாட்டேன், ஜனாதிபதியாக வருவதற்கு ஜனாதிபதி வேட்பாளராக, ஜனாதிபதி பொது வேட்பாளராக, ஜனாதிபதி எதிரணி வேட்பாளராக என்னைக் களமிறங்கச் சொன்னால் அது வேறு விடயம்.
இந்த நாட்டிலே எந்தச் சமூகத்தவரும், எந்தச் சமயத்தவரும், எந்த மொழியைப் பேசுபவர்களும் ஜனாதிபதியாக வரமுடியும், அதற்குப் போட்டியிடமுடியும். ஆகையினாலேயே அப்படியான சூழ் நிலையிலே நான் மட்டுமல்ல வேறு எவராவதும் போட்டியிட அழைக்கப்பட்டாலும் அதை ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்பது தான் எனது நிலைப்பாடு. ஆனால், தமிழ் மக்களது அரசியல் அபிலாஷைகளை வெளிப்படுத்துவதற்காக ஜனாதிபதித் தேர்தலிலே ஒரு பொதுவேட்பாளரை நிறுத்தி அந்த அபிலாஷைகளை வெளிப்படுத்த வேண்டும் என்ற கருத்தில் எனக்கு உடன்பாடில்லை - என்றார். (அ-ம-100)

## ரணிலை...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பவற்றுக்கே ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெறுவதற்குரிய சாத்தியம் காணப்படுகின்றது. தேசிய மக்கள் சக்தி சற்று எழுச்சி பெற்றிருந்தாலும் அந்தக் கட்சியினரால் வெற்றி இலக்கை நோக்கி நகரமுடியாது.
பொதுஜன பெரமுன கடும் நெருக்கடியை எதிர்கொண்டவேளை கட்சியையும், எம்மைக் காப்பதற்கு ரணில் விக்கிரம சிங்கவே முன்வந்தார். எனவே, ரணில் தொடர்பில் சாதகமாக சிந்திக்கவேண்டும். சில விட்டுக்கொடுப்புகளை பெரமுன செய்யவேண்டும். ஜனாதிபதி வேட்பாளர் தேர்வின் போது ஓரிரு அடிகள் பின்வாங்கினால்கூட பரவாயில்லை" - என்றார். (அ-ம-44)

## பெரமுனவை...

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அழைப்பு விடுத்துள்ளார் நடாளுமன்ற உறுப்பினரான டிலான் பெரேரா.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
"சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைப்பதற்குரிய முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது. நிமல் சிறிபால டி சில்வா உள்ளிட்டவர்கள் அரசின் பக்கமே உள்ளனர். இதேவழியில் சுதந்திரக் கட்சி பயணித்தால் யானை விழுங்கிய விளாம்பழத்தின் நிலையே சுதந்திரக் கட்சிக்கு ஏற்படும். அவ்வாறானதொரு நிலை ஏற்படாமல் இருக்கவும், ஊழல் மிகு இந்த அரசை விரட்டியடிப்பதற்காகவும் ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் அனைத்துச் சக்திகளையும் இணைக்கும் பொறுப்பை முன்னெடுக்குமாறு சந்திரிகா அம்மையாருக்கு அழைப்பு விடுக்கின்றேன்" - என்றார். (அ-ம-44)

## படகு...

சென்ற மீனவர் ஒருவர் படகு மூழ்கியதால் உயிரிழந்துள்ளார்.
மன்னார் - பள்ளிமுனை மேற்குப் பகுதியைச் சேர்ந்த எஸ்.ஏ.ஜான்சன் (வயது-62) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். நேற்று மாலை 4 மணியளவில் பெய்த கடும் மழையையடுத்து படகு கடலுக்குள் மூழ்கியுள்ளது. அந்தப் படகில் பயணித்த மேலும் சில மீனவர்கள் கடலில் குதித்து நீந்தித் தப்பித்த நிலையில், மேற்படி மீனவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்த மீனவரின் சடலம் மீட்கப்பட்டு மன்னார் மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. (அ-ம-56)

## நாடாளுமன்றில்...

நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்விலேயே, முள்ளிவாய்க்கால் சிரட்டையை சபாநாயகரிடம் சமர்ப்பித்து இந்தக் கோரிக்கையை சிறீதரன் முன்வைத்தார்.
"நான் இந்தச் சிரட்டையை சபாபீடத்துக்குச் சமர்ப்பிக்கின்றேன். இதுதான் முள்ளிவாய்க்காலில் கஞ்சி வழங்கிய சிரட்டை. குடிப்பதற்கு ஒரு உபகரணம் இருக்கவில்லை, காய்ச்சுவதற்கு அரிசி இல்லை, உப்பு இல்லை, தண்ணீர் எடுப்பதற்குக்கூடபிரச்சினை, இந்த நிலையில் வெறும் உப்பில்லாத கஞ்சியைக் காய்ச்சி இந்த சிரட்டையிலேதான் குடித்து மக்கள் உயிர்தப்பினர். எனவே, முள்ளிவாய்க்கால் அடையாளமாக இந்தச் சிரட்டையை சபாபீடத்தில் சமர்ப்பிக்கின்றேன். தயவு செய்து, நாடாளுமன்றத்தின் நூதன சாலையில் இதை வையுங்கள்" என்று சிறீதரன் எம்.பி. இதன்போது தெரிவித்தார். (அ-ம-44)

## அமெ...

குறித்த அமெரிக்க நிறுவனத்தின் பிரதிநிதிகள் இலங்கை வந்துள்ளனர் எனவும், ஆரம்ப கட்ட யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் அறியமுடிகின்றது.
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பரப்புரை நடவடிக்கையைக் கையாளவுள்ள அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க ஆகியோரும் மேற்படி குழுவுடன் ஆலோசனை நடத்தியுள்ளனர்.
ஜனாதிபதித் தேர்தலை செப்ரெம்பர் மாத இறுதியில் அல்லது ஒக்ரோபர் முதல் வாரத்தில் நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## எந்தக்...

எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.
ஐக்கிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுப் பணிப்பாளரான அஜித் பி பெரேரா இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-
"பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது எமக்கு முக்கியமானது அல்ல. ரணில், தம்மிக்க பெரேரா என எவர் வந்தாலும் நிச்சயம் தோற்கடிக்கப்படுவார்கள். தேசிய மக்கள் சக்தியிடம் நாட்டு மக்கள் ஆட்சியைக் கையளிக்கக் கூடாது. அவ்வாறு செய்ய முற்பட்டால் அது ஆபத்தாகவே அமையும்" - என்றார். (அ-ம-44)

## கிணற்றிலிருந்து...

இருந்து சடலம் மீட்கப்பட்டுள்ளது. புத்தளம் பகுதியைச் சேர்ந்த மனோராசன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். கரைவலை வாடி ஒன்றில் தங்கி நின்று மீன்பிடியில் ஈடுபட்டுவந்த நபரைக் காணவில்லை என்று தேடியபோதே அந்த நபர் கிணற்றுக்குள் சடலமாக இருப்பது அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் மருதங்கேணிப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் உரிய சட்ட நடவடிக்கைகளுக்கு அமைய சடலத்தை மீட்டனர். (அ-ம-27)

## பூநகரி...

ஆயிரத்து 727 மில்லியன் டொலர் மதிப்பிலான இந்தத் திட்டத்தின் முதற்கட்ட கட்டணமாக 500 மில்லியன் டொலரை மார்ச் மாதத்துக்கு முன்பாகச் செலுத்தப்படவேண்டும். திட்டத்துக்கான அனுமதிப் பத்திரத்தைப் பெறுவதற்கு 700 மில்லியன் டொலர் செலுத்தப்படவேண்டும். 700 மில்லியன் டொலர் செலுத்தப்படாத வரையில் எந்தவிதமான மேலதிக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாது என்று நிலைபேண்தகு அதிகாரசபை தெரிவித்துள்ளது. (அ-ம-6)

## முறிகண்டியிலும்...

யில் சடலமொன்று நேற்றையதினம் மீட்கப்பட்டுள்ளது.
சடலம் ஒன்று காணப்படுவது தொடர்பில் மாங்குளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் உரிய சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து சடலத்தை மீட்டனர். வவுனியா - ஊஞ்சிலாந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த ஆசீர்வாதம் (வயது-49) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், மே 14

வண்ணையம்பதி ஸ்ரீவேங்கட வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தின் சங்காபிஷேகம், கடந்த வெள்ளிக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

சங்காபிஷேக உற்சவத்தை, ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இ.ரமணீதரக்குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் நடத்தி வைத்தனர். (ப-27)



கொக்குவில் தென்மேற்குக் கிராம அலுவலர் பிரிவில், முதியோர் சங்கத்தினரின் ஏற்பாட்டில், ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகளால் மருத்துவ முகாம் ஒன்று கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (ப-66)



# நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மே 14

பேசாலை எழுத்தாளர் ஐ.மதிவளனின் ஆக்கத்தில் உருவாக்கப்பட்ட 'உள்ளச் சிதறல்கள்' எனும் கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா, பேசாலை ஜோண் மேரி ஹோட்டலில் கடந்த சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற்றது. வளர்கலை மன்றத்தின் அனுசரணையுடன் மன்றத் தலைவர் இ.கெனிசியஸ் லியோன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செ. அடைக்கலநாதன், அருட்பணி ஜே.டெனிஸ் குரூஸ் அடிகளார், சட்டத்தரணிகள் அன்ரனி மடுத்தீன், பிறிமூஸ் சிராய்வா, மன்னார் மாவட்ட தேனி மாற்றுத்திறனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-60)



அலெக்ஸ் பரந்தாமனின் 'கடலலைகளை மேவிய கதை' எனும் நாவல் வெளியீட்டு விழா, யாழ்ப்பாணம் தேசிய கலை இலக்கியப் பேரவையில், கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (ப)



முன்பள்ளி ஆசிரியர்களுக்கான இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக ஒன்றுபடல் நிகழ்வு, நல்லூர்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் திருமதி யசோதா உதயகுமார் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ப-66)


## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு: 074 173 7684

(CS4897) J-1

## தொழிலாளர் தேவை

கீரிமலை, சேந்தான்குளம் பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு பொதியிடல் வேலைக்கு ஆட்கள் தேவை. மதிய உணவுடன் சம்பளம் 1500/-

தொடர்பு:- 077 760 8528

(CS4889) S-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் 31 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை 15 இலட்சத்திலிருந்து 20 இலட்சம் வரை
- தரகர் தேவையில்லை.

தொடர்பு :- 077 886 2927

(CS488) J-1





கிளிநொச்சி, மே 14


மாற்றுத்திறனாளிகள் எதிர்கொள்ளும் சவால்கள், அவற்றை உரிய முறையில் நிவர்த்தி செய்வதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள், தற்பொழுது காணப்படும் வாய்ப்புகள் மற்றும் முன்மொழிவுகள் பற்றிய தகவல்களைக் கலந்துரையாடுவதற்கான விசேட செயலமர்வு, மாற்றுத்திறனாளிகள் பற்றிய நாடாளுமன்ற ஒன்றியத்தின் தலைவர் டலஸ் அழகப்பெரும தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் ஒன்றியத்தின் இணைத்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மதுரவிதானகே, இயலாமையுடைய நபர்களுக்கான சங்கங்களின் ஒன்றிணைந்த முன்னணியின் தலைவருமான ரசாஞ்சலி பத்திரகே, தேசிய ஜன நாயக நிறுவனத்தின் ஆலோசகர் சியாமா சல்காது, யாழ். மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பாளர் ரி. கனகராஜ் வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ.வாகீசன், பிரதேச செயலாளர்கள், திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள் மாற்றுவலுவுள்ளோர் அமைப்புகளின் பிரதிநிதிகள், மாற்றுத்திறனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஒ-113)

## தடுப்புக்...

வைத்துப் பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தி வந்த நிலையில் அவர் பொலிஸ் நிலையத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளார். தப்பிச் சென்றவரைக் கைதுசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-26-66)


## தகவல் தெரிவிக்கவும்



**வை.கனகலிங்கம்**

எனும் 82 வயதுடைய வயோதிபர் தனது வீட்டின் முன் காணாமல் போய் உள்ளார். தனது வீட்டின் முன் சென்ற வாகனத்தில் உதவியைப் பெற்று வேறிடம் சென்றுள்ளார். வயது மூப்பின் காரணமாக உள்ள ஞாபகம் மறதியால் வீடு திரும்ப முடியாமல் உள்ளார். தயவு செய்து யாராவது இவரைக் கண்டால் பின்வரும் இலக்கங்களில் குறுந்தகவல் அனுப்பவும்.

074 090 9597
076 834 0781

(CS 00492) S-1




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.